(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(1).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 பெப்ரவரி 15 புதன்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 1/2023

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ கபில அதுகோரல

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ சம்பத் அதுகோரல,— பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட கருமங்களை விசாரிப்பதற்கும் அது தொடர்பாக பொருத்தமான விதப்புரைகளை மேற்கொள்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு,—

2020 டிசம்பர் 03 ஆம் திகதி திரு. என். ஜீ. புஞ்சிஹேவா (தவிசாளர்), திரு. எஸ். பி. திவாரத்ன, திரு. எம். எம். மொஹமட், திரு. கே. பி. பி. பத்திரண மற்றும் திருமதி பி. எஸ். எம். சார்ல்ஸ் ஆகியோரைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாதலாலும்;

அரசியலமைப்பின் 104ஆ(3)ஆம் உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழு பாரளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாதலாலும்;

அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 30(4) ஆம் உறுப்புரை மூலம், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பதவிவகியாதொழிவதுடன் தற்காலிக உறுப்பினர்களின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்து நிறைவேற்றுவதாதலாலும்;

உள்ளூரதிகார சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்களை தேர்தல் ஆணைக்குழு 2023 ஜனவரி 18 ஆம் திகதி கோருவதற்குக் கருதியதாதலாலும்;

ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் வாக்களிப்புத் தினமாக 2023 மார்ச் 09 ஆம் திகதியை நிர்ணயிப்பதற்கு தீர்மானித்ததுடன் ஏனைய மூன்று உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெற்றுள்ளதாகக் கோரியதாதலாலும்;

2023 மார்ச் மாதத்தில் அத்தகைய தேர்தலை நடாத்துவதற்கான நிதிகளைக் கண்டறிவது சவாலாக அமையும் என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுச் செயலாளர் நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசி ஒன்றை தாக்கல் செய்துள்ளதாதலாலும்;

அத்தகைய தேர்தலை நடாத்துவதற்கு அனைத்து முன்நிபந்தனைகளும் நிறைவேற்றப் படுவதையிட்டு ஆணைக்குழு திருப்தியடைகிறதா எனும் கேள்வி எழுவதாதலாலும்;

2023 ஜனவரி 25 ஆம் திகதி ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரான திருமதி பி. எஸ். எம். சார்ல்ஸ் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததாலும்;

உள்ளூரதிகார சபைத் தேர்தல் தொடர்பாக எழுந்த விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழு அரசாங்க நிதிக்குப் பொறுப்பான பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்வதற்குத் தவறியதாதலாலும்; மற்றும்

பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்பட்டிருந்தால், அது விசாரணைசெய்யப்படுவதுடன் அது தொடர்பாக பொருத்தமான விதப்புரைகள் மேற்கொள்ளப்படுதலும் வேண்டும் என்பதாதலாலும்;

பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட கருமங்களை விசாரிப்பதற்கும் அது தொடர்பாக பொருத்தமான விதப்புரைகளை மேற்கொள்வதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

   (ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏழு (07) உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

   (ஆ) மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை, குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழிமூலமாக பெற்றுக்கொள்வதற்கும்;

   (இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

   (ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலும் தடைபெறாது கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது, அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஒரு (01) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படும் அத்தகைய காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.